அறிவிப்பு எண்.அ1/3607/2025 நாள். .11.2025

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

குளித்தலை ஊராட்சி ஒன்றியம்

கரூர் மாவட்டம்.

**கரூர் மாவட்டம் குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தில், ஒன்றிய தலைப்பில் கீழ் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் பணியிடம் நிரப்புவதற்கான அறிவிக்கை**

கரூர் மாவட்டம், குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தில், ஒன்றிய தலைப்பின் கீழ் ஊதியம் பெறும் பணியிடங்களில் காலியாக உள்ள கீழ்காணும் பணியிடத்தை பூர்த்தி செய்யும் / நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 21.11.2025 முதல் 30.11.2025 வரை நேரடியாக/அஞ்சல்வழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பொருள் | | | ஈப்பு ஓட்டுநர் |
|---|---|---|---|
| 1. | ஊதியம் | – | Level – 8 (ரூ.19500– 71900) |
| 2. | வயது (01.07.2025 அன்று குறைந்தபட்சம்) | – | 18 |
| 3. | 01.07.2025 அன்று அதிகபட்ச வயது வரம்பு | – | 42 |
| 4. | மொத்த பணியிடங்கள் | – | 01 |
| 5. | இன சுழற்சி விவரங்கள் | – | SC(A) – General<br>பட்டியல் சாதியினர்(முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியர்) பொது |
| 6. | கல்வித் தகுதி மற்றும் பிற தகுதிகள் | – | 1). 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>2). மோட்டார் வாகன சட்டப்படி தகுதியான அலுவலரால் வழங்கப்பட்ட செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.<br>3). 5 ஆண்டுகளுக்கு குறையாமல் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| 7. | விண்ணப்ப படிவம் | – | விண்ணப்ப படிவம் https://karur.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 8. | விண்ணப்ப கட்டணம் | – | ரூ.50/- (Commissioner, Panchayat Union, Kulithalai) என்ற பெயரில் ரூ.50/–க்கான வங்கி வரைவினை (DD) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்) |
| 9. | விண்ணப்பங்கள் பெறப்படும் காலம் | – | 21.11.2025 முதல் 30.11.2025 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை (நேரடியாகவோ அல்லது Speed Post மூலமாகவோ விண்ணப்பத்தை குளித்தலை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அளித்திடலாம்) |
| 10. | விண்ணப்பிக்க கடைசி நாள் | – | 30.11.2025 மாலை 5.45 மணி வரை |
| 11. | விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி | – | ஆணையாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், குளித்தலை, கரூர் மாவட்டம், பின்கோடு–639120 |

# நிபந்தனைகள்

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் https://karur.nic.in என்ற இணையதள முகவரியில் இருந்து விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து அனைத்து கலங்களையும் முழுமையாக பூர்த்தி செய்து, கல்வித்தகுதி, சாதிச்சான்று, ஓட்டுநர் உரிமம், முன் அனுபவச் சான்று உள்ளளிட்ட அனைத்து சான்றிதழ்களின் சுய சான்றொப்பம் இட்ட நகல்களை இணைத்து நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் விண்ணப்பித்திட வேண்டும்.

1. நிர்ணயிக்கப்பட்டுள்ள இனசுழற்சி, வயது, முன் அனுபவம் மற்றும் கல்வித் தகுதியுள்ள நபர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.
2. தகுதியில்லாத விண்ணப்பங்கள் மற்றும் காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் முன்னறிவிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.
3. சுயமுகவரியுடன் கூடிய அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட அஞ்சல் உறை 1 (10 x 4 Inches Postal Cover) இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
4. மேலே குறிப்பிடப்பட்டுள்ள இனச்சுழற்சி மற்றும் இட ஒதுக்கீட்டின் படியே நியமனம் மேற்கொள்ளப்படும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணல் நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்த தகவல் அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

**ஆணையாளர்,**
**ஊராட்சி ஒன்றியம்,**
**குளித்தலை.**